<u>தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்</u>

<u>C.C. No. 125 /2025</u>

PW:4

30.10.2025

**<u>குறுக்குவிசாரணை</u>**

கருணாநிதி த/பெ.முத்தையன்

**1ம் எதிரி இறந்தார். 2ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

திருத்தங்கூர் கூட்டுறவு கடன் சங்கத்தில் காசாளர் என்ற பதவி மற்றும் பொறுப்பு இருக்கின்றதா என்றால் இல்லை. என்னுடைய பாதுகாப்பில் இருந்த தீர்மான புத்தகத்தில் எதிரி ரவிக்குமார் காசாளர் என குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். சங்கத்தில் செயலாளர், எழுத்தர் , அலுவலக உதவியாளர் என்ற பதவிகள் மட்டுமே உள்ளது என்றாலும் காசாளர் என்ற பதவி இல்லை என்றாலும் சரிதான். எதிரி எழுத்தர் என்ற முறையில் செயல்பட்டுள்ளார் என்றாலும் காசாளர் என்ற முறையில் செயல்படவில்லை என்றாலும் சரியல்ல.

தவறுகள் நடந்ததாக சொல்லப்பட்ட காலத்தில் நான் தனி அலுவலர் என்ற பதவியில் இல்லை என்றால் சரிதான். தவறு நடந்ததாக சொல்லப்பட்ட காலகட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக குழுவின் நேரடி பார்வையில் இருந்தது என்றால் சரிதான். நான் நிர்வாக பொறுப்பேற்ற பிறகு அதற்கு முன்னர் தணிக்கையாளர் சமர்ப்பித்த தணிக்கை அறிக்கையை பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் மேலதிகாரியின் வேண்டுக்கோளுக்கிணங்க செயல்பட்டுள்ளேன் என்றாலும் என்னுடைய மதிநுட்பத்தை பயன்படுத்தி விசாரணை அதிகாரியிடம் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல.

இந்த வழக்கில் குறிப்பிட்டுள்ள கையாடல் தொகை குறைவிற்கு இந்த எதிரி எவ்விதத்திலும் பொறுப்பானவரோ, கடப்பாடு உடையவரோ இல்லை என்றால் சரியல்ல. எதிரியின் பணி எழுத்து பணி மட்டும் என்றாலும் தொகை கையாளும் பொறுப்பு எதிரிக்கு இல்லை என்றாலும் சரிதான். சங்கத்தினுடைய செயலாளருக்கு தான் தொகையை கையாளுதல், சங்க இருப்பு பணத்தை கையாளுதல் மற்றும் அனைத்திற்கும் செயலாளரே தனிப்பட்ட பொறுப்பு என்றால் சரிதான்.

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு அதை சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அது சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA

Digitally signed by LATHA
Date: 2025.10.30 16:13:14 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
திருவாரூர்.